**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமைதடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 42/2025**

[CNR.NO.TNTV16-000042 -2025]

(தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.96/2021**

[CNR.NO.TNTJ09-000974 -2021])

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>மன்னார்குடி உட்கோட்டம்,<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண்.1515/2021. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. ஜெயகாந்தன், வயது (56/2026) – 1 வது எதிரி**<br>த/பெ. ராமச்சந்திரன்,<br>எண்.21, அய்யா வண்டையார் தெரு,<br>மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |

| | |
|---|---|
| | **2. அறிவழகன், வயது (61/2026) – 2 வது எதிரி**<br>த/பெ. லோகநாதன்,<br>எண்.49, அய்யா வண்டையார் தெரு,<br>மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**3. குமரசரவணன் (எ) சரவணன் 51/2026 – 3 வது எதிரி**<br>த/பெ. முருகையன்,<br>எண்.2/32 மேலத்தெரு,<br>மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**4. பாலகுரு, வயது 49/2026 – 4 வது எதிரி**<br>த/பெ. உலகநாதன்,<br>வடக்குதெரு, மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**5. ராமசாமி, வயது 25/2026 – 5 வது எதிரி**<br>த/பெ. கஜேந்திரன், |

| | |
|---|---|
| | வடக்குத்தெரு, ராஜாளிகுடிக்காடு,<br>மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br>**6. திராவிடச்செல்வன், வயது 32/2026**<br>**– 6 வது எதிரி**<br>த/பெ. நாகப்பன்,<br>மேலத்தெரு, மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**7. விக்கி (எ) விக்னேஷ், வயது 29/2026**<br>**– 7 வது எதிரி**<br>த/பெ. பெத்தையன்,<br>கிழக்குத்தெரு, மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**8. பிரகாஷ், வயது 25/2026**<br>**– 8 வது எதிரி**<br>த/பெ. திருநாவுக்கரசு,<br>கிழக்குத்தெரு, மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**9. சாணக்கியன், வயது 25/2026** |

| | |
|---|---|
| | **–9 வது எதிரி**<br>த/பெ. ராகலிங்கம்,<br>எண்.180 நடுத்தெரு, மூவாநல்லூர்.<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**10. பாண்டியன், வயது 43/2026**<br>**–12 வது எதிரி**<br>த/பெ. சங்கரன்,<br>ஜெயந்தி காலனி, மூவாநல்லூர்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | 1 முதல் 9 எதிரிகள் மீது ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 427, 506(ii) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) கீழும்,<br>12-வது எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 427, 506(ii) கீழும், |
| எதிரிகள் காவலில் அடைக்கப்பட்ட நாள் | 4 மற்றும் 12 ம் எதிரிகள் 13.10.2021<br>5 ம் எதிரி 22.10.2021<br>1, 2, 3 எதிரிகள் மாண்புமிகு சென்னை |

| | |
|---|---|
| | உயர்நீதிமன்ற பிறப்பித்துள்ள உத்தரவின்படி எதிரி கடந்த 28.10.2021-ம் தேதியன்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார்.<br>6, 7, 8 எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற பிறப்பித்துள்ள உத்தரவின்படி எதிரி கடந்த 15.11.2021-ம் தேதியன்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார். |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | 12.10.2021 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30.11.2021 |
| பா.நா.சு.ச. பிரிவு 251- ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 1 முதல் 9 மற்றும் 12 ம் எதிரி மீது 17.12.2025 |
| பா.நா.சு.ச. பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட | -- |

| | | |
|---|---|---|
| பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | | |
| **சாட்சிகளின் பெயர்கள்** | **மு.வி. நாள்** | **கு.வி . நாள்** |
| அ.சா.1 - ராதிகா | 24.02.2026 | இல்லை |
| அ.சா.2 - ராஜாராமன் | 24.02.2026 | இல்லை |
| அ.சா.3- உதயசந்திரன் | 04.03.2026 | இல்லை |
| அ.சா.4- சுரேஷ் | 04.03.2026 | இல்லை |
| அ.சா.5- சேகர் | 04.03.2026 | இல்லை |
| அ.சா. 6 - சக்கரவர்த்தி | 04.03.2026 | இல்லை |
| அ.சா. 7 - மாரிமுத்து | 04.03.2026 | இல்லை |
| அ.சா. 8- முருகன் | 07.03.2026 | 07.03.2026 |
| அ.சா. 9 - பாலச்சந்தர் | 24.03.2026 | 24.03.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 26.03.2026 | |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | -- | |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் | குற்றவாளிகள் இல்லை. | |

| | |
|---|---|
| கூற்றுக்கள் | |
| நீதிபதியின் தீர்மானம் | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**, 1 முதல் 9 எதிரிகள் மீது ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 427, 506(ii) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) கீழும், 12-வது எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 427, 506(ii) கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப் படவில்லை என்பதால், 1 முதல் 9 மற்றும் 12ம் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து 1 முதல் 9 மற்றும் 12 ம் எதிரிகளை பா.நா.சு.ச 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்களான சா.பொ-1 பிளாஸ்டிக் |

| | |
|---|---|
| | நாற்காலிகள் - 5, சா.பொ-2 கிழிந்த நிலையில் உள்ள பிளக்ஸ், சா.பொ-3 - 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை, சா.பொ-4 - 67.5 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை ஆகியவற்றை பொறுத்தவரையில் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025 நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு 26.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு. S. மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 9 மற்றும் 12 ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரமேஷ், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததன் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.....

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:

காவல் துறையினர் முன்னதாக இவ்வழக்கில் மேலே சொல்லியுள்ள 1 எதிரி ஜெயகாந்தன், 2 ம் எதிரி அறிவழகன், 3 ம் எதிரி சரவணன், 4 ம் எதிரி பாலகுரு, 5 எதிரி ராமசாமி, 6-ம் எதிரி திராவிடசெல்வன், 7 ம் எதிரி விக்கி (எ)

விக்னேஷ், 8 ம் எதிரி பிரசாஷ், 9 ம் எதிரி சாணக்கியன், 10 எதிரி மணியரசன், 11 ம் எதிரி பிரபு, 12 ம் எதிரி பாண்டியன் என 12 எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளனர். அந்த இறுதி அறிக்கையின்படி, இவ்வழக்கின் அ.சா-1 ராதிகா மற்றும் பிரபாகரன், அ.சா-1 ராதிகாவின் கணவர் ராஜாராம், அன்பழகன் மனைவி கலைமதி ஆகியோர் அனைவருஇவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025 நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ம் ஆதிதிராவிடர் விரிவை சேர்ந்த இந்த பறையர் வகுப்பை சேர்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் பிற்படுத்தப்பட்ட இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள். 10-ம் எதிரி பாண்டியன் என்பவர் ஆதிதிராவிடர் பிரிவை சேர்ந்த இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர். அ.சா-1ன் மாமனார் பிச்சைமுத்து பஞ்சாயத்து தலைவராக இருந்து இறந்து போய்விட்டஇவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025 நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. தால் அந்த காலியிடத்திற்கு தேர்தல் நடந்தபோது அ.சா.1-ன் கொழுந்தனார் பிரபாகரன் தி.மு.க கட்சி சார்பில் போட்டியிட்டுள்ளார். அ.தி.மு.க சார்பில் அ.சா.1-ன் சமூகத்தை சேர்ந்த ரவி

போட்டியிட்டுள்ளார். கடந்த 12.10.2021 ஆம் தேதி நடந்த வாக்கு எண்ணிக்கையில் அ.தி.மு.க கட்சியை சேர்ந்த ரவி வெற்றி பெற்றுள்ளார். அன்று பகல் 3.00 மணியளவில் அ.தி.மு.க, அ.ம.மு.க கட்சியை சேர்ந்தவர்கள், ஜெயகாந்தன் தலைமையில் ஊர்வலமாக வந்து அ.சா-1 வீட்டிற்கு எதிரே வெடி வெடித்து சத்தம் போட்டு கோசம் போட்டுள்ளனர். இதனை பார்த்த அ.சா-1 வெளியே வந்து வெற்றிபெற்றால் வீட்டிற்கு போக வேண்டியது தானே, எதுக்கு வெடி வெடித்து கோஷம் போடுறிங்க என கேட்டபோது கள்ளர் சமூகத்தை சேர்ந்த எதிரிகள் அ.சா-1 யை பார்த்து ஒரு பொம்பளைக்கு அவ்வளவு திமிரா என பொது இடத்தில் ஜாதியை சொல்லி திட்டி வாசலில் இருந்து தி.மு.க பிளக்ஸ் போர்டை 9, 10 மற்றும் 11 எதிரி கிழித்து சேதப்படுத்தி அ.சா.1-ன் வீட்டிற்குள் குற்றம் செய்யும் நோக்கோடு அத்துமீறி நுழைந்து தின்னையில் கிடந்த பிளாஸ்டிக் சேர்களை அடித்து உடைத்து சேதப்படுத்தி தடுக்க வந்த அ.சா-1ன் கணவர் மற்றும் கொழுந்தனாரை அடித்தும், அ.சா-1 யையும், அ.சா-1ன் கொழுந்தனார் மனைவி கலைமதியையும் கையாலும், கம்பாலும் அடித்து வீட்டோடு, வீட்டில் உள்ள அனைவரையும் கொளுத்தி விடுவோம் என மிரட்டியுள்ளனவும் இதனால் 1 முதல் 8 எதிரிகளின் செய்கையானது இ.த.ச

பிரிவுகள் 147, 448, 451, 323, 427, 506(2) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(va) ன் கீழும் 9, 10, 11 எதிரிகளின் செய்கையானது இ.த.ச பிரிவுகள்147, 448, 451, 323, 427(2 எண்ணிக்கை), 506(2) உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) 3(1)(r), 3(1)(s), 3(2)(va) கீழும், 12ம் எதிரிகளின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 147, 448, 451, 323, 427, 506(2) கீழும் தண்டிக்கப்பட வேண்டுமென இறுதி அறிக்கையினை மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி இறுதி அறிக்கையானது தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தஞ்சை நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.96/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 12 எதிரிகள் ஆஜராகியுள்ளனர். இந்நிலையில் 10 மற்றும் 11ம் எதிரிகள் வழக்கு விசாரணைக்கு ஆஜராகதாததால் அவருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்துவந்துள்ளது. இந்நிலையில் கடந்த 19.07.2025-ம் தேதியிலிருந்து திருவாரூர் மாவட்டத்தில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் சிறப்பு சிறஇவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025

நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்பு வந்தவுடன் இந்நீதிமன்றத்தில் புதிதாக வழக்கு எண் SSC No.42/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் 1 முதல் 9 மற்றும் 12 எதிரிகள் மட்டும் ஆஜராகியுள்ளனர். இதனை தொடர்ந்து இவ்வழக்கில் உள்ள 10 மற்றும் 11ம் எதிரிகளுக்கு எதிராக பிணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணைய பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி வழக்கில் 10 மற்றும் 11ம் எதிரி மீதான வழக்கை மட்டும் பிரித்து எடுத்து புதிய வழக்கு எண்.128/2025 என கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1 முதல் 9 மற்றும் 12ம் எதிரிகளை பொருத்த வரையில் இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

**3.** அரசு தரப்பு மற்றும் 1 முதல் 9 மற்றும் 12 ம் எதிரிகள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இவ்வழக்கின் 1 முதல் 9 எதிரிகள் மீது ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va),

இ.த.ச.பிரிவுகள் 427, 506(ii) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) கீழும், 12-வது எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 427, 506(ii) கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது 1 முதல் 9 மற்றும் 12 ம் எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்துள்ளனர். இதனை தொடர்ந்து அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக மேற்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் மொத்தம் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-31 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாரம்சம்.**

**(i) அ.சா.1 ராதிகா**. இவரது கணவர் **அ.சா.2 ராஜராஜன்** ஆவார் இவர்கள் இருவரும் இந்த பறையன் வகுப்பை சேர்ந்தவர்கள். மேலும் இவர்கள் மன்னார்குடி வட்டம், மூவாநல்லூரில் வசித்துவருகிறார்கள். இவர்களின் சாட்சியங்களின் படி கடந்த 12.10.2021 ம் தேதியன்று நடைபெற்ற ஊராட்சி மன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் 100 க்கும் மேற்பட்டவர்கள் கூட்டமாக வெடி வெடித்துக்கொண்டு அ.சா.1 வசிக்கும் தெருவில்

சென்றுள்ளனர். வெடி வெடித்ததால் ஏற்பட்ட புகை மூட்டத்தினால் அ.சா.1 ஆனவர் மயக்கம் அடைந்து அவரது வீட்டு கம்பியில் சாய்ந்துவிட்டார். பின்னர் மருத்துவமனைக்கு சிசிச்சைக்காக சென்றுள்ளார். மருத்துவமனையில் இவர் சிகிச்சையில் இருக்கும் வந்த போலீசார் வசம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். அ.சா.ஆ.3 புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் தனது என கூறியதால் அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii)** அ.சா.3 உதயசந்திரன் இவர் மேற்படி சம்பவத்தை கேள்விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 சுரேஷ், அ.சா.5 சேகர், அ.சா.6 சக்ரவர்த்தி, அ.சா.7 மாரிமுத்து ஆகியோர்கள் இந்த வழக்கு விபரம் எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள். இருப்பினும், இந்த அ.சா.7 ஆனவர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரில் உள்ள மட்டும் தனது எனக்கூறியுள்ளார்.

**(iii)** அ.சா.8 முருகன், இவர் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது தகவலின் பேரில் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 டன் அ.சா.ஆ.3 ஆன புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து மன்னார்குடி

நகர காவல் நிலையத்தில் நிலைய குற்ற எண். 1515/2021 ன் கீழ் இவ்வழக்கின் அ.சா.ஆ 4 அன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

**(iv)** அ.சா.9 பாலசந்தர், இவர் மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து போது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அ.சா.ஆ 5 ஆன செயல் ஆணை மூலம் இவரை இவ்வழக்கினை புலன்விசாரணை செய்யவேண்டும் என உத்தரவிட்டதை தொடர்ந்து இவர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். மேலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சம்பவ இடத்தில் இருந்து சா.பொ.1 ஆன உடைந்த நிலையில் இருந்த 5 பிளாஸ்டிக் சேர்கள் மற்றும், சா.பொ.2 பிளக்ஸ் ஆகியவைகளை சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.8 ஆன கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். பின்னர் சா.பொ.1 மற்றும் 2 ஆகியவைகளை அ.சா.ஆ.91 ஆன படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் தனது புலன்விசாரணையில் 4ம் எதிரி பாலகுரு மற்றும் 12ம் எதிரி பாண்டியன்

ஆகியோர்கள் இவ்வழக்கு குற்றசம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்ததால் அவர்களை இவ்வழக்கின் எதிரிகளாக சேர்த்து அ.சா.ஆ.10 ஆன சிறப்பு அறிக்கை தயார் செய்து, மேற்படி 4 மற்றும் 10ம் எதிரிகளை கைது செய்து செய்துள்ளார் பின்னர் எதிரிகள் கொடுத்த தகவலின் அடிப்படையில் மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவில் முன்பு உள்ள கல்மண்டபம் அருகில் இருந்து ஆஜர் செய்த சா.பொ.3 ஆன ஆர்.எஸ்.பதி கட்டையினை அ.சா.ஆ 11 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதன் மூலம் கைப்பற்றி அதை **அ.சா.ஆ.12** அன படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**(v)** அ.சா.9 ஆனவர் மேலும் 22.10.2021ம் தேதி சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் 5ம் எதிரி ராமசாமி 6ம்எதிரி திராவிட செல்வன், 7ம் எதிரி விக்கி (எ) விக்னேஷ்வரன் மற்றும் 8ம் எதிரி பிரகாஷ் ஆகியோர்கள் இவ்வழக்கு குற்றசம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்ததால் அவர்களை இவ்வழக்கின் எதிரிகளாக சேர்த்து **அ.சா.ஆ.13** ஆன சிறப்பு அறிக்கை தயார் செய்து, பின்னர் 5ம் எதிரியை அன்றைய தினமே கைது செய்து விசாரணை மேற்கொண்டபோது 5ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு அதன் பின்னர் 5ம் எதிரி அவர்

வீட்டிற்கு பின்னால் மறைத்து வைத்திருந்த சா.பொ.4 ஆன ஆர்.எஸ்.பதி கட்டையினை **அ.சா.ஆ 14 கைப்பற்றுதல் மகஜர்** தயார் செய்து அதன் மூலம் கைப்பற்றி அதை **அ.சா.ஆ.15** அன படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**(vi)** இவ்வழக்கில் உள்ள அ.சா.1 மற்றும் 12 ம் எதிரி பாண்டியன் ஆகியோர்கள் இந்து பறையன் ஜாதியினை சேர்ந்தவர்கள் என்பதற்கான அ.சா.ஆ 16 மற்றும் அ.சா.ஆ.17 ஆன ஜாதி சான்றிதழ்கள், சாட்சி பிரபாகரன் என்பவர் இந்து சாம்பன் என்ற ஜாதி என்பதற்கான அ.சா.ஆ 18 ஆன சாதி சான்றிதழ், மற்றும் 1 முதல் 11 வரையான எதிரிகள் இந்து கள்ளர் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதை காட்ட அ.சா.ஆ 19 முதல் அ.சா.ஆ 29 வரையிலான சாதி சான்றிதழ்களை உரிய வட்டாச்சியர் அலுவலகத்தில் பெற்றுள்ளார்.

**(vii)** மேலும் அ.சா.9 ஆனவர் அ.சா.1 ராதிகா மற்றும் ஒரு பிரபாகரன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து அ.சா.ஆ.30 மற்றும் அ.சா.ஆ 31 ஆன விபத்து பதிவேடுகளை பெற்று. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரணை செய்து புலன்விசாரணையினை முடித்து இவ்வழக்கில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6.** அரசு தரப்பு சாட்சியங்கள் விசாரணை முடிந்தவுடன் அரசு தரப்பு சாட்சியங்களில் 1 முதல் 9 மற்றும் 12 எதிரி ஆகியோர்களுக்கு பாதகமாக உள்ள அம்சங்களை பொறுத்து மேற்படி எதிரிகளிடம் பா.நா.சு.ச. பிரிவு351(1)(பி)ன் படி கேள்விகள் கேட்டபோது எதிரிகள் மேற்படி சாட்சிகளை பொய் என்றும் தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சியங்கள் எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

**7. <u>வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u> :-**

(i) 1 முதல் 9 எதிரிகள் மீது ப.ச.&ப.ப. (வ.கொ.த.இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025 நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ) சட்டப்பிரிவு 3(1)(r), இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 427, 506(ii) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) -ன் கீழான குற்றச்சாட்டுக்களும்,

(ii) 12-வது எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 427, 506(ii) கீழான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. **<u>தீர்வு</u>** :-

அரசுத்தரப்பு வழக்கின் படி இவ்வழக்கில் உள்ள அ.சா.1 ராதிகா மற்றும் ஒரு பிரபாகரன் ஆகியோர்கள் காயம்பட்ட நபர்கள் ஆவார்கள். இதில், காயம்பட்ட நபரான பிரபாகரன் என்பவர் இறந்துவிட்டார் என்பதற்கு அரசு தரப்பில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால், தற்பொழுது காயம்பட்ட நபரான அ.சா.1 மட்டுமே சாட்சியமளித்துள்ளார். இவர், தனது சாட்சியத்தில் இந்த எதிரிகள் தனது சாதியின் பெயரை சொல்லி அசிங்கமாக பேசியதாகவோ, தன்னை தாக்கியதாகவோ எதுவும் கூறவில்லை. இந்த அ.சா.1-ன் கணவரான அ.சா.2 தனது சாட்சியத்தில், இந்த எதிரிகள் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும், அதனால் தனது மனைவிக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்று எதுவும் கூறவில்லை. அடுத்து இந்த வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிகளான அ.சா.3 உதயசந்திரன் இவர் சம்பவத்தை கேள்விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 சுரேஷ், அ.சா.5 சேகர், அ.சா.6 சக்ரவர்த்தி, அ.சா.7 மாரிமுத்து ஆகியோர்கள் இந்த

வழக்கு விபரம் எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள். இதனால் இவர்களது சாட்சியங்களை வைத்து இந்த எதிரிகள் குற்றமிழைத்துள்ளார்கள் என கருத இயலவில்லை. இந்நிலையில், அரசுத்தரப்பில் அ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்த அ.சா.8 ஆன உதவி ஆய்வாளர் மற்றும் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த அ.சா.9 ஆன காவல் துணை காண்காணிப்பாளர் அவர்களின் சாட்சியத்தை வைத்து இந்த எதிரிகள் இவ்வழக்கில் குற்றம் இழைத்துள்ளார்கள் என முடிவு செய்ய இயலாது.

**9.** மேற்சொன்னவாறு, சாட்சி சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையில், இந்த வழக்கில் உள்ள 1 முதல் 9 மற்றும் 12 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சி சான்றாணங்கள் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதால் இந்த வழக்கின் எதிரிகள் குற்றம் செய்துள்ளார்கள் என கருத இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, 1 முதல் 9 எதிரிகள் மீது ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va),

இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 427, 506(ii) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) கீழும், 12-வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 427, 506(ii) கீழான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் 1 முதல் 9 மற்றும் 12 வது எதிரியை மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து 1 முதல் 9 மற்றும் 12-வது எதிரியை பா.நா.சு.ச 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்களான சா.பொ-1 பிளாஸ்டிக் நாற்காலிகள் - 5, சா.பொ-2 கிழிந்த நிலையில் உள்ள பிளக்ஸ், சா.பொ-3 - 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை, சா.பொ-4 - 67.5 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை ஆகியவற்றை பொறுத்தவரையில் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மற்றொரு SSC 128/2025 நிலுவையில் உள்ளதால் சொத்து தொடர்பான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 -ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:01:15 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | ராதிகா |
| அ.சா.2 | ராஜாராமன் |
| அ.சா.3 | உதயசந்திரன் |
| அ.சா.4 | சுரேஷ் |
| அ.சா.5 | சேகர் |
| அ.சா.6 | சக்கரவர்த்தி |
| அ.சா.7 | மாரிமுத்து |
| அ.சா.8 | முருகன் |

அ.சா.9 பாலச்சந்தர்

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7-ன் முதலாவது கையொப்பம். |
| அ.சா.ஆ.3 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை நகல் |
| அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 8 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 |
| அ.சா.ஆ.10 | சிறப்பு அறிக்கை |
| அ.சா.ஆ.11 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.12 | படிவம் 91 |
| அ.சா.ஆ.13 | சிறப்பு அறிக்கை |
| அ.சா.ஆ.14 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.15 | படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | அ.சா-1 சாதி சான்றிதழ் |

அ.சா.ஆ.17 12 ம் எதிரி பாண்டியன் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ.18 சாட்சி பிரபாகரன் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ.19 1 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 20 2 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 21 3 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 22 4 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 23 5 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 24 6 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 25 7 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 26 8 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 27 9 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 28 10 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 29 11 ம் எதிரியின் சாதி சான்றிதழ்

அ.சா.ஆ. 30 அ.சா-1 ன் விபத்து பதிவேடு

அ.சா.ஆ. 31 சாட்சி பிரபாகரன் விபத்து பதிவேடு

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:**

சி.பி 10/2025, 11/2025, 12/2025

சா.பொ.1 பிளாஸ்டிக் நாற்காலிகள் - 5

சா.பொ.2 கிழிந்த நிலையில் உள்ள பிளக்ஸ்

| | |
|---|---|
| சா.பொ.3 | 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை |
| சா.பொ.4 | 67. 5 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ். பதி கட்டை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-</u>**

இல்லை

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:01:27 +0530

அமர்வு நீதிபதி,

பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு)

வழக்குகளை விசாரிப்பதற்கான

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.